காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற ஒன்றிய – நகர – பகுதி பேரூர் செயலாளர்கள் மற்றும் பூத் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் கழகப் பொருளாளர், மக்களவைக் குழு தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா ஆகியோர் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் சம்பந்தமாக ஆலோசனைகளை வழங்கினார்கள். அருகில் மீ.அ.வைதியலிங்கம், இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வெ. விசுவநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மதுரையில் ரூ.9.47 கோடியில்

சர்வதேசத் தரத்திலான ஹாக்கி மைதானம்!

புதுப்பிக்கும் பணியை – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார்!

சென்னை, செப். 25 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளியுடன் கூடிய வளைகோல் பந்து (ஹாக்கி) மைதானம் புதுப்பிக்கும் பணி மற்றும் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைவிங் வசதியுடன் கூடிய நீச்சல் குளம் அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட விளையாட்டு மைதானங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், நவீன உடற்பயிற்சி கூடங்கள், சட்டமன்ற தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டு விடுதி கட்டடங்கள் என பல்வேறு விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், முதலமைச்சர் அவர்கள் செஸ் ஒலிம்பியாட், பார்முலா 4 இரவு நேர சாலை கார் பந்தயம், ஆசிய ஆடவர் ஹாக்கி போட்டி, ட்ரையத்தலான் போட்டி, ஆசிய அலைசறுக்கு போட்டி, டென்னிஸ் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச போட்டிகளை சென்னையில் நடத்தி உலகின் முன்னணி விளையாட்டு நகராக சென்னையை உருவாக்கி வருகின்றார். அதன் அடிப்படையில் சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு தமிழ்நாடு அரசுடன் இணைந்து வருகின்ற 2025 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சென்னை மற்றும் மதுரையில் ஆண்கள் ஜுனியர் உலகக்கோப்பை 2025 போட்டியை நடத்த உள்ளது. இதற்காக மதுரை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் உள்ள வளைகோல் பந்து (ஹாக்கி) மைதானம் 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளியுடன் கூடிய மைதானமாக புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (24.09.2025) மதுரை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளியுடன் கூடிய வளைகோல் பந்து (ஹாக்கி) மைதானமாக புதுப்பிக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து மதுரை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைவிங் வசதியுடன் கூடிய நீச்சல் குளம் அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு பணி முன்னேற்றம் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மதுரை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு அரங்கில் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதை நேரில் பார்வையிட்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாரா விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் அவரிடம், பாரா விளையாட்டு வீரர்கள் தாங்கள் விளையாட்டு போட்டிகளில் வென்ற பதக்கங்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, மு.பூமிநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்கள் குறித்து

எச்.வி.ஹண்டே எழுதும் கடிதங்கள் எனக்கு ஊக்கமளிப்பவை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.25-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்களை, அவரது மருத்துவமனைக்கு நேரில் சென்று சந்தித்ததையொட்டி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்த தமது பார்வைகளை முன்வைத்தும் தனிப்பட்ட முறையில் என்மீது அன்பு பொழிந்தும் முன்னாள் அமைச்சர் எச்.வி. ஹண்டே அவர்கள் எழுதும் கடிதங்கள் எப்போதும் எனக்கு ஊக்கமளிப்பவை!

99 வயதிலும் அயராமல் உழைத்து வரும் அவரை, அவரது மருத்துவமனையில் சந்தித்து மகிழ்ந்தேன்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

மதுரை – தேனூரில் 195 பயனாளிகளுக்கு

‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு!

மதுரை, செப். 25 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) மதுரை மாவட்டம் தேனூர் கிராமத்தில் ஒரே இடத்தில் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கிராம பொதுமக்கள் உள்பட 195 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டு, கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் குடிசை வீடுகளே இல்லை என்ற நிலையை உருவாக்கிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 - 2011 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய மக்களுக்கு லட்சக்கணக்கான கான்கிரீட் வீடுகளை கட்டி வழங்கினார்.

தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து 3.10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகளை கட்டி வழங்கி வருகின்றார்கள். மேலும் பயனாளிகளின் வீட்டில் 12,000 ரூபாய் மதிப்பீட்டில் கழிப்பறை கட்ட நிதி வழங்கப்படுகின்றது. பயனாளிகளுக்கு 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளை கட்டுவதற்கான பணியினை மேற்கொள்ள 100 வேலை நாட்களுக்கு தலா 33,600 ஊதியமாக வழங்கப்படுகின்றது.

மதுரை மாவட்டம் மதுரை வடக்கு வட்டம், சமயநல்லூர் உள்வட்டத்திற்கு உட்பட்ட தேனூர் கிராமத்தில் 128 மாற்றுத்திறனாளிகள், 37 திருநங்கைகள், தேனூர் கிராமத்தை சேர்ந்த 119 பயனாளிகள், 117 பொதுமக்கள் என மொத்தம் 401 பயனாளிகளுக்கு வருவாய்த்துறையின் சார்பில் இலவச வீட்டுமனை அனுபந்தப்பட்டா வழங்கப்பட்டது.

இந்த பயனாளிகளில் தற்போது வரை 74 மாற்றுத்திறனாளிகள், 37 திருநங்கைகள், தேனூர் கிராமத்தை சேர்ந்த 84 பயனாளிகள் என மொத்தம் 195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் வீடுகட்ட ஆணைகள் வழங்கப்பட்டு வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று (24.9.2025) மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம் தேனூர் கிராமத்தில் ஒரே இடத்தில் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கிராம பொதுமக்கள் உள்பட 195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வீடுகள் கட்டும் பணிகளை அலுவலர்கள் தொடர் ஆய்வு மேற்கொண்டு வீடுகள் தரமாக கட்டப்படுவதையும், குறித்த காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை உறுதி செய்யுமாறும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த குடியிருப்பு பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஒரு மரக்கன்றினை நட்டு நீருற்றினார்.

இந்த ஆய்வின்போது வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி க.வானதி உள்பட அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வி. சுதாகர் தலைமை!

எழும்பூர் தெற்குப் பகுதியில் கழக முப்பெரும் விழா - நலத்திட்ட உதவிகள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, செப். 25-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க.முப்பெரும் விழாவை முன்னிட்டு “முப்பெரும் தொடர் 05” அறிவுப் புரட்சி படைத்தது கழகம்! அனைவரும் வாழ எழுந்தது உதயம்!! எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்டம் நாளை (26.9.2025 -வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில், சென்னை, B.K.N.திருமண மண்டபம், அனிதா பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, முன்னிலை வகிக்கின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.எம்.யாழினி வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் 70வயது கடந்த 76 கழக மூத்த முன்னோடி மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு சான்றிதழ் மற்றும் பொற்கிழி வழங்கி சிறப்பு செய்தல், 500 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி புத்தாடைகள் வழங்கி சிறப்பு செய்தல், 150 கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உபகரணங்கள் வழங்குதல், 150 திருநங்கைகளுக்கு புத்தாடை மற்றும் உதவித்தொகை வழங்குதல், 20 மகளிர் சுய உதவி குழுக்களைச் சார்ந்த 200 மகளிருக்கு சுழல் நிதி மற்றும் புத்தாடை வழங்கி சிறப்பு செய்தல் - ஆகிய நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் சொ.வேலு எம்.சி, கோ. ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், பரிதிஇளம்சுருதி எம்.சி, வே. உமாகாந்தன், புனிதவதி எத்திராசன் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, எஸ்.மணிமுடி, ராஜேஸ் வரிஸ்ரீதர் எம்.சி, அ.நிர்மலா தேவி, கோ.மணி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பாஃத்திமா முசாஃபர் எம்.சி, எஸ்.ரசூல், டி.வி. வேலு, எம்.மலர்மாறன், கே. அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜே.கே.கருணாகரன், கே.வள்ளி, சூளை சூப்பராயலு, ஆர்.பாபு(எ) சந்திரசேகரன், எஸ்.டால்பின்ஹரி, இ.மொய்தீன், வான்மதிகதிரவன், ஜி. தயாளன், வி.அபாய், க.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் வி.விஜயகுமார் வட்டகழக செயலாளர் நன்றி கூறுகிறார்.

‘அன்புக் கரங்கள்’ திட்டத்தில் 6082 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2000 நிதி!

பெற்றோரை இழந்த 1340 மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கல்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, செப்.25-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (24.09.2025) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் “அன்புக்கரங்கள்“ திட்டத்தின் சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் குறிப்பாகவும், சிறப்பாகவும் சமூக நலன் சார்ந்த திட்டங்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் சீரிய சிந்தனையில் உதித்த “தாயுமானவர் திட்டம்” மிகவும் வறுமையில் வாழும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆதரவற்றோர், தனியாக வாழும் முதியவர்கள், ஒற்றை பெற்றோர் உள்ள குடும்பங்கள், ஆதரவற்ற குழந்தைகள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளை

கொண்ட குடும்பங்களுக்கு அரசு நலத்திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக முதற்கட்டமாக, மிகவும் வறிய நிலையில் உள்ள சுமார் 50,000 குடும்பங்களில், குழந்தைகள் தங்கள் இரண்டு பெற்றோரையும் இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வருவது தெரியவந்துள்ளது. இக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், இக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியை தொடர, மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பானது 14.03.2025 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்திற்கு “அன்பு கரங்கள்” என்று பெயரிடப்பட்டு, இத்திட்டத்தை செயல்படுத்த கைபேசி செயலி (Mobile App) உருவாக்கி அதன் மூலம் கள ஆய்வு (Filed verification) மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு ரூ.1.69 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்திடமிருந்து (TNeGA) பெறப்பட்ட 2,82,105 குடும்பங்களின் விவரங்களை இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆகியோரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இத்திட்டத்தில் பயனடைய தகுதியான குழந்தைகளின் விவரங்களை கைபேசி செயலி பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட குழந்தைகளின் தரவுகளை தாசில்தார் அளவில் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது. தற்போது “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களின் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களை ஆய்வு செய்தும் 6,082 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

‘அன்பு கரங்கள்’ திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் தகுதிகள்:

ஆதரவற்ற குழந்தைகள் (பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள்)

கைவிடப்பட்ட குழந்தைகள் (பெற்றோரில் ஒருவர் இறந்து மற்றொரு பெற்றோர் குழந்தையை கைவிட்டுச் சென்று இருப்பின்)

ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் (பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டவராக இருந்தால்)

ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் (பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால்)

ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் (பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வந்தால்)

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், 15.09.2025 அன்று, சென்னை, கலைவானர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உறவினர்களின் அரவணைப்பில் வளரும் 6,082 குழந்தைகளுக்கு நிதி வழங்கி “அன்பு கரங்கள்” திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், இந்நிகழ்வில் 12ம் வகுப்பு முடித்து பல்வேறு கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற பெற்றோர் இருவரையும் இழந்த 1,340 மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இன்று சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் “அன்பு கரங்கள்” திட்டம் பயனாளிகளை சேர்க்கும் முகாம் காலை 09 மணி முதல் மாலை 04 மணி வரை நடத்தப்பட்டு வருகிறது. தகுதியுள்ளவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் (தெற்கு) ஹென்றி, (வடக்கு) திரு.ஸ்ரீமுரளி, மாமன்ற உறுப்பினர் த.மோகன்குமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சாலவாக்கம் அருகே பொற்பந்தல் உள்ளிட்ட கிராமங்களில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், அரசு பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடம், மேல்நிலை நீர் தேக்க தொட்டி ஆகியவற்றை க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்து, ஆங்காங்கே மரக்கன்றுகளை நட்டார். உடன் ஒன்றிய செயலாளர் டி. குமார், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், வெங்கடேசன், அமுதா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ஊராட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் – பழங்குடியின

இளைஞர்களுக்கான ஆதி கலைக்கோல் பயிற்சிப் பட்டறை நிறைவு நாள்!

அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் நிறைவுரையாற்றினார்!

சென்னை, செப்.25-

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதிகலைக்கோல் பயிற்சிப் பட்டறையை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (22.9.2025) அன்று தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மற்றும் தாட்கோ தலைவர் நா.இளையராஜா கலந்து கொண்ட தொடக்க விழா நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

நேற்றைய 24.09.2025 நிறைவு நாள் விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) நடத்திய இளைஞர்களுக்கான மூன்று நாட்கள் ஆதிகலைக்கோல் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இதனைத் தொடர்ந்து பழைமையான கலைகளையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் மாணவர்களுக்கு கற்றுத் தரும் ஒரு நிகழ்வாக வடிவமைக்கப்பட்டு நாட்டுப்புறக் கலை, நாடகக் கலை, இலக்கிய கலை மற்றும் காட்சி கலை ஆகிய நான்கு கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை கொண்டு மூன்று நாட்கள் பயிற்சி பயிலரங்கம் இம்மையத்தில் நடைபெற்றது.

இக்கலைகளின் வழியாக மனித எண்ணங்களின் சிந்தனைகளை இணைக்கும் ஒரு பாலமாகவும், கற்பனையை மேன்மைபடுத்தும் கலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து இளைஞர்களுக்கு வழி நடத்தும் நோக்கில் இக்கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இக்கலைகள் மண்ணுக்கும் மக்களுக்குமான ஆழமான உறவை, பாரம்பரிய இசைக்கருவிகளின் துடிப்போடு இசைத்து, நடனம் ஆடி மரபின் உயிரோட்டத்தை இளைஞர்களின் உள்ளங்களில் விதைத்து, கலாச்சாரத்தின் வேர்களைப் புதுப்பிக்கும் நாட்டுப்புறக்கலைகளையும், வாழ்க்கை கதைகளையும் சமூக உண்மைகளையும் மேடையேற்றி, சிந்தனைகளையும் உணர்வுகளையும் அனைவருக்கும் கொண்டு சேர்த்து புதிய பாதை அமைத்துக்கொள்ள வழிவகை செய்யும் நாடக கலைகளையும் மற்றும் இலக்கியத்தின் வழியே மனிதர் கண்ட வளர்ச்சியை, மொழியும், கவிதையும் எடுத்து ரைத்தன அத்தொன்மையை இந்தக் கலைகள் வழிநடத்தும், இலக்கிய கலைகளையும், வண்ணங்களும் வடிவங்களும் இணைந்து மனித எண்ணங்களின் சிந்தனைகளை இணைக்கும் ஒரு பாலமாகவும், கற்பனையை மேன்மைபடுத்தும் கலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து 300 இளைஞர்களுக்கு இப்பயிற்சி பட்டறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் இன்றைய அறிவிப்பின்படி முதற்கட்டமாக ஒவ்வொரு கலைகளிலும் சிறந்து விளங்கிய ஒரு நபரை தேர்வு செய்து நான்கு நபர்களுக்கு தலா ரூ 20000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) க்கான காசோலை வழங்கப்பட்டது.

கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் கொட்டையூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு வளர்ச்சி நிதியிலிருந்து ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடத்தை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். கழக ஒன்றிய செயலாளர் மோ. ரமேஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, மருத்துவர் அணி மரு. தினேஷ், ஒன்றிய நிர்வாகிகள் ஆர். கோபால், பிஞ்சிவாக்கம் ரவி, ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் கே.பி.எஸ். கார்த்திக், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் சதாசிவம், சிவக்குமார், கண்ணூர் ராஜா, மப்பேடு ராஜேந்திரன், நீலாவதி ராஜேந்திரன், மப்பேடு சண்முகம், இருதயா, பிஞ்சிவாக்கம் உதயா, சரண்ராஜ், தினேஷ், கிளைக் கழக செயலாளர்கள் தீனதயாளன், ராஜேந்திரன், கங்காதரன், செல்வம், ஏழுமலை, பாலாஜி, உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.